செ.வெ.எண் : 05 நாள் : 05.06.2017

# கோயம்புத்தூர் மாவட்டத்தில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் அரசு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கி பயில விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவாகள் தகவல்!!!

**********

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கென இயங்கி வரும் 29 அரசு விடுதிகளில் தங்கி பயில பள்ளி மற்றும் கல்லூரி பயிலும் மாணவ மாணவியர்கள் விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சிததலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பிறப்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் கல்லூரி மாணவர்களுக்காக 5 விடுதிகளும், கல்லூரி மாணவியர்களுக்காக 2 விடுதிகளும், பள்ளி மாணவியர்களுக்காக 6 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. 2016-17ஆம் கல்வியாண்டிற்கு பள்ளி விடுதிகளில் 4ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளும், கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு பட்ட மேற்படிப்பு, பாலிடெக்னிக், ஐ.டி.ஐ, தொழிற்பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவ, மாணவிகளும் சேர தகுதி உடையவர்கள் ஆவர். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளில் அனைத்து வகுப்பைச் சேர்ந்த மாணவர் மாணவியர்களும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இவ்விடுதிகளில் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்படும், மேலும் 10ம் மற்றும் 12ம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு சிறப்பு வழிகாட்டிகள் புத்தகம் வழங்கப்படும். மாணவ மாணவியர்கள் சேர்க்கைக்கு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.1லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும், இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8கி.மீ மேல் இருத்தல் வேண்டும். மாணவியர்களுக்கு இவ்விதி பொருந்தாது. தகுதியுடைய மாணவ மாணவியர் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதிக்காப்பாளர் காப்பாளர்களிடமிருந்தோ, மாவட்ட பிறப்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். மேலும்

www.tn.gov./bcmbcdept - என்ற இணையதள முகவரியிலும் தரவிரக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளில் சேர விரும்பும் மாணவ மாணவியர்கள் 20.06.2017 க்குள்ளும், கல்லூரி விடுதிகளில் மாணவ மாணவியர்கள் 15.07.2017க்குளும் சம்பந்தப்பட்ட விடுதிக்காப்பாளரிடமோ அல்லது, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும். மாணவ மாணவியர்கள் விண்ணப்பிக்கும்போது, சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்களை இணைத்து அனுப்ப வேண்டும். மேலும் முகாம்வாழ் இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே அனைவரும் இச்சலுகையினை பயன்படுத்தி சிறந்த கல்வியினை பெற மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்திமக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**